# அன்னை மரியின் ஆணை

## P.V Jesudas

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

இந்த உலகத்திலேயே ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு பெண் யாரென்றால், அது அன்னை மரிதான். கடவுளால் விசேஷமாக தெரிந்துக்கொள்ளப்பட்ட ஒரு பெண் அவர். இன்றைக்கு ஏறக்குறைய 90 பகுதி கிறிஸ்தவர்கள், அன்னை மரிக்கு அதிகமாக மதிப்பு கொடுத்து வணங்கவும் செய்கிறார்கள். ஒரு சிலர் அவரை வணங்காவிட்டாலும், அவருக்கு ஈடு இனையற்ற ஒரு விசேஷமான மதிப்பும் கொடுக்கிறார்கள். அன்னை மரியை பற்றி வேதத்திலும், சரித்திரத்திலும் நாம் என்ன வாசிக்கிறோம்?

கன்னியாக இருந்த மரியம்மை யோசேப்புக்கென்று நியமிக்கப்பட்டபோது, காபிரியேல் தூதன் பரலோகத்திலிருந்து வந்து அந்த அன்னைக்கு தரிசனமாகி: உனக்கு ஒரு குழந்தை பிறக்கும், அவர் உன்னதமானவர் என்று சொல்லப்படும் என்று சொன்னார். அப்பொழுது கன்னிமேரியம்மை: நான் புருஷனை அறியேனே என்று சொன்னார். அந்த தூதன் திரும்பவும்: பரிசுத்த ஆவியானவர் உன் மேல் நிழலிடுவார், தேவ வல்லமை உன் மேல் வரும், உனக்கு பிறக்கிற குழந்தை பரிசுத்த குழந்தையாக இருக்கும் என்று சொன்னார்.

**அவள் இருந்த வீட்டில் தேவதூதன் பிரவேசித்து: கிருபை பெற்றவளே வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார், ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றான். – லூக்கா 1:28.**

தேவ தூதர்களுக்கு தலைவனாகிய காபிரியேல் வந்து அந்த கன்னிமரியம்மையினிடத்தில்: கிருபை பெற்றவளே வாழ்க என்று பேசினார். கிருபை பெற்றவளே என்றால், கர்த்தர் அந்த பெண்ணுக்கு இறங்கி இருக்கிறார். கர்த்தர் அந்த பெண்ணுக்கு இறக்கம் காட்டினார். அந்த இறக்கம் காட்டுதலின் அர்த்தம் என்ன? ஒரு ஆண்டவர் அவளது வயிற்றிலே பிறக்கும் பாக்கியம் அவளுக்கு கிடைத்தது. ஸ்திரிகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப் பட்டவளே என்று தேவதூதன் சொல்லுகிறார். ஆகவே உலகத்தில் யாருக்கும் கிடைக்காத பாக்கியம் அவளுக்கு கிடைத்தது.



**அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப்பார்த்தார்; இதோ, இதுமுதல் எல்லாச் சந்ததிகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள். – லூக்கா 1:48.**
**என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூருகிறது.– லூக்கா 1:47.**

இங்கு, தான் அடிமையின் தாழ்மை என்றும், தன் இரட்சகர் என்றும் சொல்லுகிறார். உலகத்தில் இருக்கும் யாவருக்கும் இயேசு கிறிஸ்துவானவர் எப்படி இரட்சகராக இருக்கிறாரோ, அதேபோல மரியம்மைக்கும் இரட்சகராக இருக்கிறார் என்று வேதம் சொல்லுகிறது.

**அவர்கள் அங்கே வந்தபோது மேல்வீட்டில் ஏறினார்கள்; அதில் பேதுருவும், யாக்கோபும், யோவானும், அந்திரேயாவும், பிலிப்புவும், தோமாவும், பர்த்தொலொமேயும், மத்தேயும், அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபும், செலோத்தே என்னப்பட்ட சீமோனும், யாக்கோபின் சகோதானாகிய யூதாவும் தங்கியிருந்தார்கள். அங்கே இவர்களெல்லாரும், ஸ்திரீகளோடும் இயேசுவின் தாயாகிய மரியாளோடும், அவருடைய சகோதரரோடுங்கூட ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள். – அப். 1:13,14.**

திருமறையிலே மேலே கொடுக்கப்பட்ட வசனம், கடைசியாக கன்னிமரியம்மை பற்றி வாசிக்கிற ஒரு பகுதியாக இருக்கிறது. அவர்கள் மேல்வீட்டிலே தங்கியிருந்தார்கள். பின்பு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை பெற்றார்கள். ஆகவே கன்னிமரியம்மையும் தேவ ஆவியின் அபிஷேகத்தை பெற்றவர்களாக இருந்தார்கள். இதுதான் கன்னிமரியம்மை பற்றி நாம் வாசிக்கிற கடைசி பகுதி, அதற்கு பிறகு அவர்களை பற்றி எழுதப்படவில்லை.

பல ஆண்டுகள் கழித்து, பாபிலோனியர்கள் கிறிஸ்தவ மார்க்கத்திற்கு வந்து சேர்ந்தபோது, அந்த பாபிலோனியர்கள் எஸ்தோர் என்ற பெண் தெய்வத்தை வணங்கி வந்தார்கள். அப்படி வணங்கி வந்தபோது, கிறிஸ்தவ மார்க்கத்திலே பெண் தெய்வமேயில்லை என்று முறுமுறுத்து வந்தார்கள். அப்பொழுது கத்தோலிக்க திருசபையை சேர்ந்தவர்கள் கன்னிமரியம்மையை ஒரு தெய்வத்தினுடைய ஸ்தானத்திற்கு தங்களுடைய சபையிலே உயர்த்தி வைத்தார்கள். அப்படியே ஜனங்கள் ஏற்றுக்கொண்டு அவரை வணங்கவும் செய்தார்கள். விசேஷமாக கடவுளுக்கு முன்பாக நமக்காக பரிந்து மன்றாடுகிற ஒருவராக அவர் இருக்கும்படி செய்து விட்டார்கள். திருமறை நமக்கு சொல்வது என்னவென்றால், பரலோகத்தின் தேவனுக்கும் நமக்கும் மத்தியஸ்தர் ஒருவர்தான், அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒருவர்தான் என்று சொல்லுகிறது. அதற்காகதான் அவர் நமக்காக பாடுபட்டு மரிக்கும்படியானார். அவர்தான் இந்த உலகத்தின் மக்களுக்காக

மன்றாடும்படி மத்தியஸ்தராக வைக்கப்பட்டிருக்கிறார்.

அநேகர் கன்னிமரியம்மை பாவமற்றவராக பிறந்தார் என்று நினைக்கிறார்கள். ஆகவேதான் இயேசு கிறிஸ்து பாவமற்ற கற்பபையிலே பாவமற்றவராக பிறந்தார் என்று கத்தோலிக்க திருசபை சொல்லுகிறது.

**முதற்பேறான எந்த ஆண்பிள்ளையும் கர்த்தருக்குப் பரிசுத்தமானதென்னப்படும் என்று கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடி அவரைக் கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுக்கவும், கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில் சொல்லியிருக்கிறபடி, ஒரு ஜோடு காட்டுப்புறாவையாவது இரண்டு புறாக்குஞ்சு களையாவது பலியாகச் செலுத்தவும், அவரை எருசலேமுக்குக் கொண்டுபோனார்கள். – லூக்கா 2:23,24.**

எட்டாம் நாளிலே இயேசு கிறிஸ்துவாகிய அந்த குழந்தையை எடுத்துக்கொண்டு ஆலயத்திற்கு போய், முதற்பேரான யாவும் கடவுளுக்கு உரியவை என்று பிரதிஷ்டை செய்தார்கள். பிறகு கர்த்தருடைய நியாயப்பிரமானம் சொல்லியிருக்கிறபடி, ஒரு ஜோடி காட்டு புறாக்களையாவது, இரண்டு புறாகுஞ்சுகளையாவது பலியாக செலுத்தினார்கள். லேவியராகமத்தில் சொல்லியிருக்கிறபடி இந்த காட்டு புறாக்களையோ அல்லது இரண்டு புறாகுஞ்சுகளை பலியிடுவது குற்றநிவாரண பலிக்காக செய்யப்பட்டது. குற்றம் செய்தவர்கள், அந்த குற்றத்தை நிவாரணம் செய்வதற்காக இந்த இரண்டு புறாக்களை பலிசெலுத்தினார்கள். ஆகவே அன்னைமரி குற்றபலி செலுத்தினார்கள் என்றால், அவருடைய பாவத்தை நீக்குவதற்காக பலி செலுத்தப்பட்டது என்று திருமறை சொல்லுகிறது.

**1853**–ஆம் ஆண்டு அக்டேபர் **4**–ம் தேதியிலே சரித்திரத்திலே ரோமன் கத்தோலிக்க சபைக்கு ஒரு விசேஷமான நாளாக இருக்கிறது. ஏனென்றால், பாப்பு அரசர் இருக்கும் வேடிகன் சிட்டியின் அரண்மனையிலே, ஏராளமான கத்தோலிக்க திருச்சபையார் கூடினார்கள். அவர்கள் பாடி துதித்து கொண்டிருக்கையில், அங்கிருந்த ஒரு பிஷப் எழுந்து நின்று: பரிசுத்த பிதாவாகிய பாப்பு அரசர் அவர்களே, கன்னிமரியம்மை பாவமற்றவராக பிறந்தவரா? இதை எங்களுக்கு நீர் சொல்ல வேண்டும் என்று கேட்டார்கள். இந்த **1800** ஆம் ஆண்டுகளுக்கு முன்னதாக அதாவது **1700** ஆம் ஆண்டுகளிலே, ஸ்பெயினுக்கும் போர்ட்டிகளுக்கும், இன்னும் எத்தனையோ கத்தோலிக்க நாடுகளுக்கு மத்தியிலே பயங்கரமான யுத்தம் நடந்தது. ஆயிரக் கணக்கான பேர் கொல்லப்பட்டார்கள். ஆகவே இப்படி



கத்தோலிக்கர்கள் ஏன் சண்டை போட்டார்கள் என்றால், ஒரு சிலர் சொன்னார்கள்: கன்னிமரியம்மை பாவமற்றவர்களாக பிறந்தார் என்றனர். வேறு சிலர் சொன்னார்கள்: இல்லை, அவர் பாவத்தோடு பிறந்தார் என்று சொன்னார்கள். அதனால் பெரிய பேராட்டம் வெடித்தது. அது கடைசியிலே யுத்தத்திலே வந்து முடிந்தது. லட்சக்கணக்கான மக்கள் மடிந்து போனார்கள். பாப்பு அரசரும் மற்றவர்களும், இந்த கொள்கைக்கு முடிவு கொண்டு வராவிட்டால், கத்தோலிக்க திருச்சபையே சண்டைபோட்டு அழிந்துவிடும் என்று சொல்லி, ஒன்றுகூடி ஆலோசித்தார்கள்.

முழங்கால் படியிட்டு எழுந்திருந்து பாவ அறிக்கை செய்து கேட்டார்கள். பரிசுத்த பிதாவாகிய பாப்பு அரசர் அவர்களே! கன்னிமரியம்மை பாவமற்றவராக உலகத்தில் பிறந்தாரா? என்று கேட்டார்கள்.

அதற்கு பாப்பு அரசர்: இதை குறித்து தேவ ஆவியானவரிடத்திலே கேட்கவேண்டும் என்று சொன்னார். திரும்பவும் அவர்கள் எழுந்து நின்று ஆண்டவருக்கு ஸதோத்திரம் செலுத்தி, துதி செலுத்தி, மறுபடியும் முழங்காற்படியிட்டு பாவ அறிக்கை செய்து, கண்ணீரோடு ஜெபம் செய்து, மன்றாடினபிறகு, திரும்பவும் அந்த பிஷப் எழுந்து நின்று: பாப்பு அரசர் அவர்களே! கன்னிமரியம்மை பாவமற்றவராக பிறந்தாரா? என்று கேட்டார்.

அதற்கு பாப்பு அரசர்: பரிசுத்த ஆவியானவரிடத்திலேதான் கேட்கவேண்டும் என்று சொல்லிவிட்டார். திரும்பவும் அவர்கள் அதேவிதமாக எல்லா காரியத்தையும் செய்துவிட்டு, திரும்பவும் பாப்பு அரசரிடத்திலே அதே கேள்வியை கேட்டார்கள்.

மூன்றாவது முறை பாப்பு அரசர் சொன்னார்: ஆம்! கன்னிமரியம்மை பாவமற்றவராக பிறந்தார் என்று சொன்னார். இந்த கொள்கை **1853** ஆம் வருடத்திலேதான் கத்தோலிக்க சபையிலே ஸ்திரப்படுத்தப்பட்டது. அதற்கு முன்னே அந்த நம்பிக்கை இருந்தபோதிலும்கூட, அதை எல்லா கத்தோலிக் கர்களும் ஒத்துபோகவில்லை.

அதற்கு அடுத்து பிரான்ஸிலே ஒரு மேய்ப்பன் ஆடுகளை மேய்த்து கொண்டு இருந்தபோது, திடிரென்று அன்னைமரி காட்சியை தோன்றசெய்தார்கள். இது பாத்திமா மாதாவாக இருந்தார். ஆகவே கத்தோலிக்கர்கள் சொன்னது: அன்னைமரி கல்லறையில் இல்லை, அவர்கள் பரலோகத்திற்கு போய்விட்டார்கள்

என்ற ஒரு கொள்கையை கொண்டுவந்தார்கள்.

அங்கு மக்களுக்கும் ஆண்டவருக்கும் இடையிலே மத்தியஸ்த்தராக பரிந்து மன்றாடுகிறார் என்ற கொள்கை வந்தது. வெளிப்படுத்தின விசேஷத்திலே பண்ணிரெண்டாம் அதிகாரத்திலே, ஒரு ஸ்திரியைப்பற்றி சொல்லப்படுகிறது. அந்த ஸ்திரிதான் கன்னிமரியம்மை என்ற கொள்கையும் வந்தது.

**அன்றியும் ஒரு பெரிய அடையாளம் வானத்திலே காணப்பட்டது; ஒரு ஸ்திரீ சூரியனை அணிந்திருந்தாள், அவள் பாதங்களின் கீழே சந்திரனும், அவள் சிரசின்மேல் பன்னிரண்டு நட்சத்திரங்களுள்ள கிரீடமும் இருந்தன. – வெளி. 12:1.**

இந்த ஸ்திரி கன்னிமரியம்மை என்று பொருள் கொடுக்கிறார்கள். தீர்க்கதரிசனத்திலே ஸ்திரி என்றால், சபையை குறிக்கிறது என்று வேதத்திலே திட்டவட்டமாக சொல்லப் படுகிறது. இப்படியிருக்க, இப்படிப்பட்ட வேறுபாடான, மாறுபாடான உபதேசங்களைப்பற்றி ஒரு சிலர் வேறு மாதிரியும், வேறு சிலர் வேறு மாதிரியாயும் சொல்லுகிறார்கள்.

மகமதியர்கள் கன்னிமரியம்மையை பற்றி மிகுந்த மதிப்பு கொடுக்கிறார்கள். குரானிலே அவரை பற்றி அநேக இடங்களிலே எழுதப்பட்டிருக்கின்றன. ஆண்டவருடைய தாயார் என்றே அவர் அழைக்கப்படுகிறார்.

இந்த உலகத்தில் கன்னமரியம்மைப்பற்றி வேறுபாடான கருத்துக்கள் இந்த உலகத்தில் இன்றைக்கு இருந்தாலும், அந்த கன்னிமரியம்மையின் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவத்தை குறித்து வேதத்திலே சொல்லப்பட்டிருக்கிறது.

அன்னைமரியின் உறவினரின் ஒருவருக்கு கானா ஊரிலே கல்யாணம் நடந்தது. அந்த திருமணத்திற்கு இயேசுவோடுக்கூட அவருடைய சீஷர்களும் சென்றிருந்தார்கள். அப்பொழுது,

**திராட்சரசம் குறைவுபட்டபோது, இயேசுவின் தாய் அவரை நோக்கி: அவர்களுக்குத் திராட்சரசம் இல்லை என்றாள். அதற்கு இயேசு: ஸ்திரீயே, எனக்கும் உனக்கும் என்ன, என் வேளை இன்னும் வரவில்லை என்றார். – யோவான் 2:3,4.**

ஒரு கலியாணத்திலே திராட்ச ரசம் குறைவுப்பட்டால், அந்த கலியாண வீட்டாருக்கு அவமானமாக போய்விடும். திருமணத்திலே எத்தனைபேர் வந்தாலும், கடைசி வரைக்கும் ஏராளமாக பறிமாறப்படவேண்டும். அது யூதருடைய வழக்கமாக இருந்தது. அப்பொழுது அங்கு திரட்சரசம் குறைந்து போய் விட்டது. அந்த கல்யாண வீட்டார் ரொம்ப வருத்தப்பட்டார்கள். இயேசுவின் தாய் அவர்களது உறவினராக இருந்ததாலே, அன்னைமரியம்மை ஆண்டவரிடத்திலே வந்து திராட்ச ரசம்



இல்லை என்று சொன்னார்கள். கன்னிமரியம்மை இயேசுவை குறித்து மேய்ப்பர்கள் வந்து சொன்னதை தன் மனதிலே வைத்துக்கொண்டிருந்தார். தேவ தூதன் இயேசுவை பற்றி சொன்னதை தன் மனதிலே வைத்திருந்தார். சிமியோன் என்ற தீர்க்கதரிசி இயேசுவை குறித்து சொன்னதை தன் மனதிலே வைத்திருந்தார். அன்னாள் என்ற தீர்க்கதரிசி இயேசுவை குறித்து சொன்னதை தன் மனதிலே வைத்திருந்தார். மூன்று சாஸ்திரிகள் இயேசுவை குறித்து சொன்னதை தன் மனதிலே வைத்திருந்தார். அவர் மகத்துமுள்ளவர், உன்னதமான குமாரர், உலகத்தினுடைய மேசியா அவரே, என்றதெல்லாம் அவர்கள் சொன்னதை அன்னைமரியம்மை தன் மனதிலே வைத்திருந்தார்.

அதிசயமாக பிறந்த அவரை இத்தனை பேர் மிக பிரபலமாக சொல்லுகிறார்களே, அவரால் ஒரு அற்புதத்தை செய்ய முடியாதா? என்று அன்னைமரியம்மை நம்பி, இயேசுவிடம் வந்து மகனே! அவர்களுக்கு திரட்சரசம் குறையப்பட்டது என்று சொன்னார். அந்த தாய்க்கு ஒரு மிக பெரிய நம்பிக்கை இருந்தது. இயேசு கிறிஸ்து நிச்சயமாக ஒத்தாசை செய்வாரென்று. அந்த நேரத்திலே ஆண்டவர் ஒத்தாசை செய்தார்.

**அவருடைய தாய் வேலைக்காரரை நோக்கி: அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதின்படி செய்யுங்கள் என்றாள். – யோவான் 2:5.**

அங்கிருந்த வேலைக்காரர்களை நோக்கி கன்னிமரியம்மை: அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ அதின்படி செய்யுங்கள் என்றார். ஆகவே வேலைக்காரர்களுக்கு சற்று விளங்கவில்லை. குறைந்துபோனது திராட்சரசமாயிற்றே, இவர் தண்ணீரை ஊற்ற சொல்லுகிறாரே என்று நினைத்திருப்பார்கள். என்றாலும் அன்னைமரியம்மை சொன்னதுபோல, இயேசுவுக்கு கீழ்ப்படிந் தார்கள்.

**அவர் அவர்களை நோக்கி: நீங்கள் இப்பொழுது மொண்டு, பந்திவிசாரிப்புக்காரரிடத்தில் கொண்டுபோங்கள் என்றார்; அவர்கள் கொண்டுபோனார்கள். – யோவான் 2:8.**

ஒரு கல்யாண விருந்துக்கு பிறகு நாம் பாயாசம் சாப்பிடுவோம் அல்லவா? அந்த பாயாசம் மிக ருசியாக இருக்கும் அல்லவா? அதேபோல அங்கு அந்த ஊரிலே திராட்ச ரசம் கொடுப்பார்கள். திராட்ச ரசம் என்றால், நாம் பழங்களை பிழிந்து திராட்சரசத்தை குடிக்கிறோமே அப்படியல்ல. அது ஒரு விசேஷமான பானம். பலவிதமான பொருள்கள் கலந்த ஒரு விசேஷமான ருசியான பானமாகும். ஆகவே இந்த

வேலைக்காரர்கள் தண்ணீரை ஊற்றினார்கள்.

இப்போது தண்ணீரை மொண்டுபோய் பந்திவிசாரிப்புக் காரரிடத்தில் கொடுங்கள் என்று சொன்னபோது, அவர்களுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. அவர்களுக்கு இது என்ன? என்று விளங்காவிட்டாலும், அந்த கன்னிமரியம்மை சொன்னது போல அவருக்கு செவிக்கொடுத்தார்கள்.

**அந்தத் திராட்சரசம் எங்கேயிருந்து வந்ததென்று தண்ணீரை மொண்ட வேலைக்காரருக்குத் தெரிந்ததேயன்றி பந்திவிசாரிப்புக்காரனுக்குத் தெரியாததினால், அவன் திராட்சரசமாய் மாறின தண்ணீரை ருசிபார்த்தபோது, மணவாளனை அழைத்து: எந்த மனுஷனும் முன்பு நல்ல திராட்சரசத்தைக் கொடுத்து, ஜனங்கள் திருப்தியடைந்தபின்பு, ருசி குறைந்ததைக் கொடுப்பான், நீரோ நல்ல ரசத்தை இது வரைக்கும் வைத்திருந்தீரே என்றான். –** யோவான் **2:9,10.**

அந்த பந்திவிசாரிப்புக்காரன் தண்ணீரை வாங்கினபோது, அது திராட்சரசமாக மாறிற்று. அது மிகவும் ருசியுள்ள திராட்சரசமாக மாறினது. அந்த திராட்சரசத்தை மொண்டு பறிமானர்களே, அவர்கள் பிரமித்து, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை தன்னுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார்கள் என்று ஒரு சரித்திர ஆசிரியர் இந்த சம்பவத்தை குறித்து எழுதினார்.

இதுவரைக்கும் அவர்கள் குடித்திராத மிக ருசியான மதுரமான திராட்சரசம் அவர்களுக்கு ஆண்டவர் கொடுத்தார். இந்த கன்னிமரியம்மை சொன்ன இந்த விசேஷமான காரியம், இன்றைக்கு உலகத்தின் எல்லா மக்களுடைய ஜீவியத்திலும் அற்புதங்களை செய்துகொண்டு வருகிறது. அன்றைக்கு மாத்திரம் அது தண்ணீரை திராட்சரசமாக மாற்றவில்லை. இன்றைக்கும் மக்கள் மத்தியிலே **அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ** அதன்படி செய்கிற பிள்ளைகள் தங்களுடைய வாழ்நாளிலே பிரமாண்டமான அதிசயங்களை அற்புதங்களை தம்முடைய வாழ்நாளிலே கண்டு ஜீவிப்பார்கள்.

என்னுடைய ஜீவியத்திலே பல அற்புதமான காரியங்கள் நடந்தது. முதல் முதலாவது நான் கல்லூரியை முடித்துவிட்டு திண்டுகல் என்ற ஊரிலே போதகராக போனேன். அங்கு நானே ஒரு கூட்டத்தை நடத்தி, அநேக மக்களை தேவனுடைய பாதத்தில் கொண்டுவந்தேன். அந்த கூட்டங்களை நடத்தினபோது, ஏராளமான கிறிஸ்தவ மக்களிடத்திலே பழகினேன். என்னுடைய பதினாறு வயதிலே நான் B.A எழுதினேன். அந்த நேரத்தில்தான் நான் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டேன்.



நான் ஒரு இந்துகுடும்பம், அதுவும் பூசாரியின் குடும்பம். இப்படியிருக்க என்னுடைய தகப்பன் என்னை அடிக்கவில்லை, இந்து குடும்பத்திலே பூசாரிகள் இருக்கும்போது ஒரு கிறிஸ்தவன் எப்படி அந்த குடும்பத்தில் தங்கமுடியும்? எனக்கு வீட்டிலே இடமில்லை என்று சொல்லி விட்டார்கள்.

என்னுடைய அக்கா புருஷன், போலீஸ் அதிகாரியாக இருந்தார். எனக்கிருந்த வாட்சு பணம் யாவற்றையும் பிடிங்கிவிட்டு, வீட்டைவிட்டு வெளியே போவென்று சொன்னார்கள். அம்மா அழுதார்கள், அக்கா அழுதார்கள், எல்லோரும் அழுதார்கள், ஆனால் என்னுடைய அத்தான் வெளியே விரட்டிவிட்டார். நான் வெளியேறும்போது எனக்கு பதினாறு வயது.

நான் போதகராக ஆனபோது, என்னுடைய தகப்பனார் ஒரு கடிதம் எனக்கு எழுதியிருந்தார். அதில்: நான் உன்னை படிக்க வைத்தேன், இப்பொழுது உனக்கு தம்பி இருக்கிறான். அந்த தம்பியை நீ படிக்கவைக்கவேண்டும். நீ இப்பொழுது வேலைக்கு செல்கிறாயல்லவா? அதனால் நீ இதை செய் என்று எழுதியிருந்தார்.

ஈரோட்டிலே ஒரு பள்ளிகூடம் இருந்தது. அந்த பள்ளிகூடத்திலே என் தம்பியை சேர்த்து இருந்தார்கள். அவனுக்கு படிப்பு செலவெல்லாம் **55** ரூபாயானது. என்னுடைய சம்பளமே **80** ரூபாய்தான். அதில் வீட்டு வாடகையும் என்னுடைய தசமபாகத்தையும் கொடுத்துவிட்டால் என் கையில் என்ன மீறும்? இதையெல்லாம் என் தகப்பனுக்கு விபரமாக எழுதினேன். அவர் அதற்கு பதிலாக: நாங்கள் வணங்குகிற தெய்வமெல்லாம் சரியானது இல்லை என்றும், இயேசு கிறிஸ்து ஒருவர்தான் உண்மையான தெய்வம் என்று சொன்னாயே, அந்த உண்மையான தெய்வம் உனக்கு ஒத்தாசை செய்யுமானால் நீ தம்பிக்கு படிப்பு செலவு செய் என்று எழுதினார். அப்படி இயேசு கிறிஸ்துவின்மீது சவாலை என்னுடைய தகப்பனார் கொடுத்ததாலே, சரி நானும் அந்த சவாலை ஏற்றுக்கொண்டு, சரி நான் செய்கிறேன் என்று சொல்லிவிட்டேன்.

**55** ரூபாய் என் தம்பிக்கும், **8** ரூபாய் வாடகைக்கும், **16** ரூபாய் தசமபாகத்துக்கும் (நான் இரண்டத்தனையாய் தசமபாகம் கொடுப்பேன் என்று பொருத்தனை செய்திருந்தேன்) அந்த காலத்திலே என்னுடைய வீட்டு வாடகைக்கு என் பங்குக்கு **8** ரூபாய் கட்டவேண்டும். ஆகவே **55, 8, 16** யாவற்றையும்

கூட்டினால் சரியாக 79 ரூபாய் வருகிறது. என்னுடைய சம்பளமே 80 ரூபாய், நான் என்ன செய்வேன்? என் கைகளிலே இருப்பது 1 ரூபாய்தான்.

அந்த 1 ரூபாயை என் வேத புஸ்தகத்திலே வைத்து, ஜெபம் செய்தேன். இயேசு கிறிஸ்து உண்மையான தெய்வம் என்று போனாயே, அவர் உன்னை வழிநடத்துவார் என்று என் தகப்பன் சொல்லிவிட்டார். என் ஆண்டவரே! நீர் இந்த 1 ரூபாயை வைத்து என்னை வழிநடத்தவேண்டும் என்று ஜெபித்தேன். இரண்டு வருஷத்திற்கு என் சம்பளம் 80 ரூபாய்தான்.

அந்த 1 ரூபாயை என் பாக்கெட்டிலே வைத்துகொண்டு ஊழியத்திற்கு போனேன். இரண்டு மணி வரைக்கும் அநேகரை பார்த்துவிட்டு, திரும்ப வீட்டிற்கு வந்தேன். காலையிலும் மத்தியானமும் சாப்பிடவில்லை. எனக்கு ஒரே பசியாக இருந்தது. வீட்டு வாசலில் ஒரு பத்து வயது பெண் நின்று கொண்டிருந்தாள்.

நான் அவளிடம்: என்ன அம்மு ஏன் இங்கே நிற்கிறாய்? என்றேன். அவள்: பாஷ்டர் உங்களுக்குகாக நான் இரண்டு மணிநேரம் நின்று கொண்டிருந்தேன் என்று சொல்லி எனக்கு இன்றைக்கு பிறந்த நாள், அதனால் அம்மா பிரியாணி செய்திருந்ததால், உங்களுக்கும் கொஞ்சம் கொடுத்து அனுப்பினார்கள் என்றாள். அந்த சிறு பெண்ணை உள்ளே அழைத்து வந்து, அவளுக்காக ஜெபம் செய்துவிட்டு, என்னிடத்திலிருந்த அந்த ஒரு ரூபாயை அவள் பிறந்த நாளுக்காக அவளிடத்திலே கொடுத்தேன்.

அந்த பெண்ணிடத்திலே ஏன் இப்படி சிறமப்பட்டு பிரியாணி செய்து எனக்கு கொண்டுவந்தீர்கள் என்று சொன்னேன். அதனால் அந்த பெண், கொண்டு வந்த சாப்பாட்டை திரும்ப எடுத்து சென்றுவிட்டது. நான் அப்படியே முழங்காற் படியிட்டு ஒரு நாற்காலியிலே படுத்தேன். இருபது நிமிடம் கழித்து கதவை யாரோ தட்டினார்கள்.

கதவை திறந்துபார்த்தால் அந்த பெண்ணும் அதன் அம்மாவும் நின்றார்கள். அந்த அம்மா: எனக்கிருப்பது ஒரே மகள், இன்ற அவளுடைய பிறந்த நாள், ஆகவே நீங்கள் நிச்சயமாக சாப்பிடதான் வேண்டும் என்று சொல்லி நேரே வீட்டு உள்ளே வந்து மேசையிலே இலையை வைத்து, பிரியாணி வைத்து, கையையெடுத்து கும்பிட்டு தயவு செய்து சாப்பிடுங்கள் பாஷ்டர்



என்று சொன்னார்கள். சரியான பசியுடன் இருந்த நான், உடனே உட்கார்ந்து சாப்பிட்டேன். ரொம்பவும் ருசியாக இருக்கிறது என்று சொன்னேன், அதற்கு அந்த அம்மா அந்த பாத்திரத்தில் இருந்த எல்லா பிரியாணியையும் போட்டுவிட்டார்கள். திரும்ப அந்த அம்மா: பாஷ்டர் இன்று சாயங்காலம் பிறந்த நாள் கூட்டம் வைத்திருக்கிறேன், அதில் நீங்கள்தான் பேசவேண்டும். இரவு சாப்பாடு எங்கள் வீட்டிலே சாப்பிடுங்கள் என்று சொல்லிவிட்டார்.

காலை மாலை சாப்பாடு முடிந்தாயிற்று. சரி மறுநாள் என்ன செய்வது? வேதம் வாசித்து குளித்து விட்டு ஊழியத்திற்காக சென்றேன். பக்கத்து மெயின் ரோட்டில் நடந்து போய்கொண்டிருந்தேன். என்னை, பாஷ்டர் என்று மூன்று பிள்ளைகள் அழைத்து, வாருங்கள் எங்களுக்காக வந்து ஜெபம் செய்துவிட்டுபோங்கள் என்று அழைத்தார்கள். நான் போய் ஜெபம் செய்தபிறகு, அந்த மூன்று பிள்ளைகளும் திடிரென்று மூன்று பைகளை வைத்துவிட்டு ஓடிபோய்விட்டார்கள். அந்த பையில் என்ன என்று பார்த்தால், அந்த மூன்று பையிலிருந்தும் மூன்று விட்டிலிருந்து சாப்பாடு வந்திருந்தது. அந்த மூன்று வேலையும் சாப்பாடு சாப்பிட்டேன்.

அந்த இரண்டு வருஷத்திலே, ஒரு ரூபாயை வைத்துதான் ஆண்டவர் என்னை ஆச்சரியமாக போஷித்தார். அவருக்கே ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் உண்டாவதாக. அன்றைக்கு எலியாவை போஷித்தார். ஆயிரக்கணக்கான பணங்களை வைத்துக்கொண்டுதான் வாழமுடியும் என்று நினைக்கிறோம். ஆனால் ஆண்டவர் ஒரு ரூபாயை வைத்துக்கொண்டு நம்மை வாழவைப்பார்.

அவர் சொன்னபடி நான் நடந்தேன். பெற்றோர் எனக்கு பெரிதல்ல. அக்கா, தம்பி எனக்கு பெரிதல்ல. எனக்கு இருந்த சொத்து சுகம் பெரிதல்ல. ஆண்டவருடைய வசனமே பெரிது. அவருடைய கட்டளையே பெரிது.

அவர் நமக்கு என்ன சொல்லுகிறாரோ, அதன்படியே செய்யவேண்டும்!

நான் பலஸ்தீனாவுக்கு போய் ARCHELOGY M.A படித்தேன். இந்த உலகத்தில் அநேகமாக ஆஸ்திரேலியா தவிர மற்ற எல்லா நாடுகளுக்கும் போயிருக்கிறேன். பிரசங்கம் பண்ணியிருக்கிறேன். இன்றைக்கு எங்கள் ஊர் பக்கம் போனால் சிலர் எழுந்து நின்று

தோத்திரம் செய்கிறார்கள். எல்லாவற்றையும் கடவுளுக்காக விட்டுவந்த என்னை ஆண்டவர் என்னை எப்படி வைத்தார் என்று பாருங்கள்! ஆண்டவர் என்னை வழிநடத்தினார், ஆசீர்வதித்தார். அவர் என்னை ஆசீர்வதித்ததை நினைத்து நினைத்து பார்க்கும்போது, எனக்கு வார்த்தையே வரவில்லை. ஏன் என்னை இப்படி ஆசீர்வதித்து நடத்தினார்? அவர் நமக்கு என்ன சொல்லுகிறாரோ, அதன்படி நடவுங்கள். அவர் சொல்லுக்கு கீழ்ப்படிய வேண்டும்.

என்னுடைய தாய் என்னை அதிகமாக நேசித்தார்கள். நானும் என்னுடைய தாயை அதிகமாக நேசித்தேன். என்னை பிரிந்து வியாதிப்பட்டு சீக்கிரமாக இறந்துபோனார்கள். ஆனாலும் கர்த்தருக்குள் பிரியமானவர்களே! தாயைவிட, தகப்பனைவிட சகோதர சகோதரிகளைவிட, உற்றார் உறவினர்களைவிட ஆண்டவராகிய அவரை நாம் நேசிக்கவேண்டும் என்று வேதம் சொல்லுகிறது. என்னுடைய ஜெபத்திலே தினமும் நான் என் தாயாருக்கு தேவனுடைய ராஜியத்தை கொடுக்கவேண்டும் ஆண்டவரே என்று கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

அவர் நமக்கு கொடுக்கிற கட்டளைகளின்படி நாம் நடக்கும்போது, நாம் அவராலே ஆசீர்வதிக்கப்படுகிறோம். நாம் ஆண்டவருக்கு கீழ்ப்படியாமல் போனால், அவருடைய ஆசீர்வாதத்தை இழந்தவர்களாக இருக்கிறோம். நாம் என்ன வந்தாலும் வரட்டும் என்ற கொள்கையுடையவர்களாய் ஆண்டவரை விசுவாசிக்கவேண்டும். நாம் சத்தியத்தை கைக்கொள்ளாமல் அசட்டை செய்யும்போது, அவரை நாம் இழந்தவர்களாக காணப்படுவோம். அன்னை மரியினுடைய ஆணை: அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதன்படி செய்யுங்கள் என்றே இருக்கவேண்டும். ஆண்டவருடைய சொல்லுக்கு நாம் கீழ்ப்படியும்போது, அவர் நமக்கு பெரும் அற்புதங்களையும் அடையாளங்களையும் தம்முடைய பிள்ளைகளுக்கு நிச்சயமாகவே செய்வார்.

நான் இந்து மார்க்கத்திலேயிருந்து வந்ததினால், சைவசித்தாந்தத்தை அதிகமாக படித்திருக்கிறேன். அதிலே போதகராக நான்கு வருடம் இருந்திருக்கிறேன். அழகப்பன் செட்டியார் என்பவரிடத்தில் நான் பேசின விதத்தை பார்த்து அவர் என்னிடத்தில் சொன்னார்: தம்பி! நீ மறுபடியுமாக சைவசித்தாந்த த்துக்கு வந்துவிடு, 5000 ரூபாய் சம்பளமாக தருகிறேன் என்றார்.



அன்றைக்கு நான் வாங்கி கொண்டிருந்த சம்பளம் 125 ரூபாய்தான். ஆனாலும் அந்த அழகப்பன் செட்டியார் எனக்கு 5000 ரூபாயும் காரும், திருநல்வேலியில் பத்து ஏக்கர் நிலத்தையும் கொடுக்கிறேன், திரும்ப வந்து சைவசித்தாந்தத்தின் உபதேசியாக இரு என்றார். அதற்கு நான்: உங்களுடைய பணமெல்லாத்தையும் நீங்களே வைத்துக்கொள்ளுங்கள், என்னுடைய தேவன் ஜீவனுள்ள தேவன், அவர் எனக்கு நிச்சயமாக தருவார். அப்படி தராவிட்டாலும் பரவாயில்லை. அதற்காக பொய்யான கடவுளை நான் ஏற்றுக்கொள்ளமுடியுமா? பத்து ஆண்டுகளுக்கு பிறகு மறுபடியுமாக அவரை நான் சந்தித்தேன். டொனேஷன் வாங்க சென்றிருந்தேன். அவர் 2000 ரூபாய் கொடுத்தப்பிறகு அவர் என்னிடம்: பத்து வருடத்திற்கு முன்பு நான் உங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்தேன். இன்றைக்கு இன்னொரு சந்தர்ப்பம் கொடுக்கிறேன், 5000 ரூபாய்க்கு பதிலாக 10000 ரூபாய் சம்பளம் கொடுக்கிறேன், பத்து ஏக்கர் நிலத்துக்கு பதிலாக இருபது ஏக்கர் நிலம் தருகிறேன், உங்களுடைய பிள்ளைகளின் படிப்பு செலவுகளை நான் பார்த்துக்கொள்கிறேன், நீங்கள் திரும்ப வாருங்கள் என்று சொல்லி கூப்பிட்டார்.

வீட்டுக்குள்ளே போய் 100 ரூபாய் கட்டுகளை எடுத்து கொண்டு வந்து, நீ புத்திமானாக இருந்தால் இதை வாங்கிகொள் என்றார். நான் அந்த பணத்தை வாங்காமல் அவரிடம் சொன்னேன்: நீங்கள் அண்டசராசரத்தையும் கொடுத்தாலும், எனக்கு அது எனக்கு வேண்டாமய்யா, தேவன் ஒருவர் எனக்கு போதும் என்று சொன்னேன்.

**அப்பொழுது எலிசா: அவனிடத்தில் ஆள் அனுப்பி, நீ போய், யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம்பண்ணு; அப்பொழுது உன் மாம்சம் மாறி, நீ சுத்தமாவாய் என்று சொல்லச் சொன்னான். அதற்கு நாகமான் கடுங்கோபங்கொண்டு, புறப்பட்டுப்போய்: அவன் வெளியே வந்து நின்று, தன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் தொழுது, தன் கையினால் அந்த இடத்தைத் தடவி, இவ்விதமாய்க் குஷ்டரோகத்தை நீக்கிவிடுவான் என்று எனக்குள் நினைத்திருந்தேன். நான் ஸ்நானம்பண்ணிச் சுத்தமாகிறதற்கு இஸ்ரவேலின் தண்ணீர்கள் எல்லாவற்றைப்பார்க்கிலும் தமஸ்குவின் நதிகளாகிய ஆப்னாவும் பர்பாரும் நல்லதல்லவோ என்று சொல்லி, உக்கிரத்தோடே திரும்பிப் போனான். அவன் ஊழியக்காரர் சமீபத்தில் வந்து, அவனை நோக்கி: தகப்பனே, அந்தத் தீர்க்கதரிசி ஒரு பெரிய காரியத்தைச் செய்ய உமக்குச் சொல்லியிருந்தால் அதை நீர் செய்வீர் அல்லவா? ஸ்நானம் பண்ணும், அப்பொழுது சுத்தமாவீர் என்று அவர் உம்மோடே செல்லும் போது, அதைச் செய்யவேண்டியது எத்தனை அதிகம் என்று சென்னிர்கள்.அப்பொழுது அவன் இறங்கி, தேவனுடைய மனுஷன் வார்த்தையின்படியே யேர்தானில் ஏழுதரம் முழுகினபோது, அவன் மிம்சம் ஒரு சிறுபிள்ளையின் மிம்சத்தைப்போல மிறி, அவன் சுத்தமினின். –2 இராஜாக்கள் 5:10–14.**

அந்த நாகமான் யோர்தான் நதியிலே நின்று, ஒரு தடவை முழுகினபோது அந்த குஷ்டரோகம் அப்படியே இருந்தது. இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது, ஆறாவது முறையாக அவன் மூழ்கி எழுந்திருந்தபோதும் அப்படியே இருந்தது. அவனுக்கு ஒரு சமயம் சந்தேகம் இருந்திருக்கக்கூடும். இனிமேல் ஏழாவது தடவை மூழ்கி என்ன பிரயோஜனம்? என்றாலும் ஏழு தடவை முழகவேண்டும் என்பது கட்டளையல்லவா? அதனால், முழகி பார்த்துவிடவேண்டியதுதான் என்று கடைசியாக முழுகி எழுந்தபோது, அந்த குஷ்டரோகம் நீங்கினது. அவனுடைய மாம்சம் சிறு பிள்ளையின் மாம்சம்போல மாறினது. கர்த்தருடைய வார்த்தைகளுக்கு செவி கொடுக்கிற பிள்ளைகளுக்கு தேவன் நிச்சயமாகவே ஆசீர்வாதத்தை தருகிறார்.

ஆண்டவருடைய கட்டளைகளுக்கு கீழ்படியவேண்டுமென்றால் அந்த பத்துகற்பனையும் கைக்கொள்ளவேண்டும். அதில் ஒன்பதைமட்டும் கைக்கொண்டு ஒன்றை விட்டுவிடுவதல்ல. அப்படி ஒன்றைவிட்டுவிட்டால் எப்படி பரலோகத்திற்கு போவது? ஏழதரம் மூழ்கினபடியால்தான் அவன் சொஸ்தமானான். ஆறு தடவை மூழ்கிய பிறகு, போதும் என்று விட்டுவிட்டால், அவன் எப்படி சுகமாயிருக்கக்கூடும்?

சபையினுடைய கடைசி பகுதி ஓரே மேய்ப்பன் ஓரே மந்தை என்றுதான் வேதம் சொல்லுகிறது. இன்றைக்கு அநேக தொழுவங்கள் இருக்கிறது. அந்த தொழுவங்களிலே என்னுடைய ஆடுகள் உண்டு என்று சொல்லுகிறார். என்னுடைய ஆடுகள் என் சத்தத்தை கேட்கும் என்று சொல்லுகிறார். எந்த சபையில் இருந்தாலும் என்னுடைய ஆடுகள் என் சத்தத்தை கேட்டு வரும் என்று ஆண்டவர் சொல்லுகிறார். ஆகவே ஆண்டவருக்கு ஒரே திருச்சபைதான் இருக்கிறது. அந்த திருச்சபை எது என்று நாம் அறிந்து அதில் சேரவேண்டும். அவர் கொடுத்த பத்து கற்பனைகளின்படி நடக்கிற சபையே அவருடைய திருச்சபை. எந்த சபை பத்து கற்பனையை முழமையாக கடைபிடிக்கிறதோ, அதுவே ஆண்டவருடைய திருச்சபை. இயேசு கிறிஸ்து வந்து கற்பனைகளை மாற்றிவிட்டார் என்று சொன்னால் நம்பாதீர்கள். அந்த திரு தெய்வீக கற்பனைகள், நித்தியநித்தியமானது. அது என்றும் அழியாதது. மற்ற சபையில் இந்த கற்பனை இல்லை, அது முடிந்து விட்டது என்று சொன்னால் அது எப்படி உண்மையான சபையாக இருக்கமுடியும்?



ஆகவே கர்த்தருக்கு ஒரே திருச்சபைதான் உண்டு. நோவா காலத்தில் வர போகிற அழிவுக்கு தப்பித்து கொள்வதற்கு, ஒரே பேழைதான் இருந்தது. வேறு எந்த இடத்தில் ஒளிந்து கொண்டாலும் அழிந்துபோகவேண்டியதுதான். ஒரே வழி, ஒரே சத்தியம், ஒரே சபை.

**பின்பு, வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன். அது: என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள். – வெளி. 18: 4.**

தேவனுடைய சட்டங்களையும், தேவனுடைய வசனங்களையும் கைக்கொள்ளாத சபைகள், எவ்வளவு உற்சாகமாக இருந்தால் என்ன? எவ்வளவு ஆடிபாடினால் என்ன? மக்களை அப்படியே இழுத்து கவர்ந்திழுக்கும்படியான காரியங்கள் இருந்தால் என்ன? தேவனுடைய சட்டங்களையும், தேவனுடைய வசனங்களையும் சரியாக கைக்கெள்ளாதபடி இருக்கிற அந்த சபைகள், கர்த்தருடைய சபைகள் என்று எப்படி சொல்லுவது?

**அந்நாளில் ஏழு ஸ்திரீகள் ஒரே புருஷனைப் பிடித்து நாங்கள் எங்கள் சொந்த ஆகாரத்தைப் புசித்து, எங்கள் சொந்த வஸ்திரத்தை உடுப்போம்; எங்கள் நிந்தை நீங்கும்படிக்கு உன்பேர்மாத்திரம் எங்கள்மேல் விளங்கட்டும் என்பார்கள். –ஏசாயா 4:1.**

ஏழு என்றால் பூரணம். எல்லா சபைகளும், ஒரு புருஷனை பிடித்து கொண்டு, அதாவது இயேசுவாகிய ஆண்டவரை பிடித்துக்கொண்டு, உங்கள் பேர் மாத்திரம் எங்களுக்கு இருக்கட்டும், நாங்கள் எங்களை கிறிஸ்தவர்கள் என்று மாத்திரம் சொல்லிக்கொள்கிறோம், ஆனால் நாங்கள் எங்கள் இஷ்டத்திற்கு செய்யும்படி எங்களை விட்டுவிடும் என்று அநேக சபைகள் சொல்லுகிறார்கள். எங்களுடைய கொள்கைப் பிரகாரம்தான் நாங்கள் செய்வோம் என்கிறார்கள். சில சபைகள் வேதவாக்கியங்களை பிடித்து கொண்டிருக்கிறது, ஆனால் ஆண்டவர் சொன்ன அநேக காரியங்களை தள்ளிவிட்டது. ஆண்டவர் பூரணத்தை விரும்புகிறபடியால், அவருடைய கட்டளைக்கு பூரணமாக கீழ்படிகிற சபை எது? அதை நாம் ஆராய்ந்து, அது கடவுளுடைய சபை என்று அறிந்து, அந்த சபயிலே தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் வந்து ஞானஸ்நானம் எடுத்து அங்கத்தினர்களாக மாறவேண்டும். ஏனென்றல் பத்து கற்பனைகளுக்கும் கீழ்படிகிற சபையே உண்மையான சபை. பத்தில் ஒன்றைவிட்டுவிட்டோமென்றால், அது ஆண்டவருடைய சபையல்ல. வேத வசனத்தை வலதுபுறம் இடதுபுறம் விலகாதபடி சொல்லுகிற சபையிலேதான் சத்தியம் இருக்கும்.

நான் வாலிபனாக இருந்தபோது, நல்ல பள்ளி விளையாட்டுகளிலே ஆர்வம் அதிகமுள்ளவனாக இருந்தேன். எல்லா விளையாடுகளையும் நான் அதிகமாக நேசிப்பேன். நான் ஸ்போட்ஸ்மேனாக இருந்தேன். எல்லா விளையாட்டுகளும் நன்றாக விளையாடுவேன். எனக்கு நோய்கள் சுலபத்தில் வராது. நோயற்று இருந்தேன். இன்றைக்கு எனக்கு ஆஸ்துமா வியாதி இருக்கிறது, அது என்னை அதிக துன்பப்படுத்துகிறது. என்னுடைய உடம்பு சுகமில்லாமல் இருக்கிறது. ஏன் என்று எனக்கு புரியவில்லை.

நான் அப்படியும் விடாமல் கர்த்தருடைய ஊழியத்திற்கு என்று வந்தேன். அதை என் வாழ்நாள் முழுவதும் கடைசி வரை நான் பிரசங்கித்து, வியாதியோடு மரித்தாலும் சரி, தேவனுக்காக நான் என் வாழ்நாளை அர்ப்பணிக்கிறேன். ஆண்டவருக்காக வீட்டை விட்டு வெளியேற்றப்பட்டேன், ஆனாலும் கர்த்தருடைய கிருபை என் மீது இருக்கிறது, அதுபோதும். தேவனை விடாபிடியால் பிடித்து கொண்டிருக்கிறேன்.

**5** அப்பத்தை வைத்து **5000** பேரை போஷித்ததை பற்றி ஏதோ சிறு கதை என்று நாம் விட்டுவிடுகிறோம். ஆனால், என்னுடைய வாழ்க்கையிலே குறைந்த சம்பளத்திலும் சொஞ்சம் பணத்திலும் என்னை தாங்கினதும் அந்த கதைதான். கிறிஸ்தவர்களை தாங்குவதும் அந்த கதைதான். நாம் பரதேசிகளாக இருக்கிறோம், பரவாயில்லை, ஆனால் பணத்தையோ சொத்தையோ நாம் பரலோகத்திற்கு எடுத்து போவது கிடையாது. பரலோகத்திற்கு நம்முடைய நல்ல குணங்களை வைத்து கொண்டுதான் போகமுடியும்.

நமக்கு பண கஷ்டமா? மிகவும் கஷ்டமான கட்டத்தில் இருக்கிறோமா? என்ன செய்வது? நான் செய்வேன் என்று நொந்து கொண்டிராமல், அந்த **5** அப்பமும் **2** மீன்களையும் எப்படி ஆயிரக்கணக்கான மக்களை போஷித்தாரோ, அப்படியே நம்மையும் போஷிப்பார் என்று நாம் விசுவாசிக்கவேண்டும். இந்த உலகத்தில் யாரும் நிம்மதியாக வாழ்ந்துவிடமுடியாது. சாத்தான் விடாமல் நம்மை துரத்திக்கொண்டுதான் இருப்பான். ஆனால் இந்த உலகத்தின் ஆட்சி தேவனுடைய கரத்தில் இருக்கிறது. ஆகவே அவருடைய கரத்தில் நம்முடைய கஷ்டத்தை வைத்துவிடுவோம். அவரிடம் நாம் கேட்கும்போது, நமக்கு உடனே பதில் வராததுபோலதான் இருக்கும். ஆனால் அவர் நம்மை உற்றுக்நோக்கிகொண்டுதான் இருக்கிறார். தகுந்த



காலத்தில் அவர் நம்மை போஷிப்பார். அவர் மனம்மாற மனுஷனல்ல!

ஆண்டவருடைய கட்டளைக்கு கீழ்ப்படிய வேண்டும். அன்னை மரியம்மை சொன்னதுபோல அவர் சொன்னபடி செய்யுங்கள் என்ற வார்த்தை நம் காதில் ஒலித்து கொண்டேயிருக்கவேண்டும். உன் ஜீவன் தப்ப வேண்டுமென்றால் பின்னிட்டு பாராதே, நேராக பார்த்து வெற்றி ஓட்டம் ஓடு என்கிறார் நம் தேவன்.

இயற்கை யாவும் அவருக்கு கீழ்படிகிறது. இயேசு கிறிஸ்து புயலையும் கடல் கொந்தளிப்பையும் அதட்டினார், அது அடங்கியது. உலகத்தில் யாவும் அவருக்கு கீழ்ப்படிகிறது, மனிதனை தவிர. மனிதன் முரண்டு பண்ணுகிறான். என்னால் முடியாது என்று சொல்லுகிறான். அவரே இந்த உலகத்தில் இரட்சிப்படைய எப்படி வாழ வேண்டும் என்று கற்றுகொடுத்தார். நாமோ, நீர் வேண்டாம் என்று கொலை அவரை கொலை செய்தோம், ஆனாலும் அவர் நம்மீது கோபப்படாமல் இன்னமும் நமக்காக பரிந்து பேசி கொண்டிருக்கிறார். என்ன அன்பான தெய்வம் நம் இயேசு கிறிஸ்து. அவர் மட்டும் நம்மை கைவிட்டிருந்தாரென்றால் நாம் எப்போதோ அழிந்து போயிருப்போம். அவரடைய அன்பு, நேசம், பாசம் யாவும் நம்மை இன்றும் ஆட்கொள்ளுகிறபடியால், மிக மிக ஜாக்கிரதையாக மனந்திரும்பி, அவரிடம் மன்னிப்பு கேட்டு, முழு மனதோடு அவரை பின்பற்றினால், இரட்சிக்கப்பட்ட நாம் அனைவரும் கைக்கோர்த்துகொண்டு பரலோக ராஜியத்திலே சகோதர சகோதிரகளால் அரவணைக்கப்பட்டிருப்போம். நித்தியமாக சந்தோஷத்தினால் களிகூந்திருப்போம். இன்றே தீர்மானம் எடுப்போம், அவர் நம்மை ஏற்றுக்கொள்ள எப்பொழுதும் காத்து கொண்டிருக்கிறார். –ஆமென்.

**ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன். – வெளி. 22:17.**